மாண்புமிகு பேரவைத் தலைவர்: செல்வி பாலபாரதி.

செல்வி க. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுபோன்று திண்டுக்கல் தொகுதிக்குள்ளும், நிலக்கோட்டை பகுதியிலும், மதுரை, சோழவந்தான் பகுதியை உள்ளடக்கிய பகுதியிலும் ஒரு தொழிற்சாலையை உருவாக்க அரசு முன்வருமா எனக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-55

மாண்புமிகு திரு. ஆர். வடிவேல்: திண்டுக்கல் மாவட்டத்தில் மொத்த வட்டாரங்கள் 11. பெறப்பட்ட மொத்த விண்ணப்பங்கள் 185. மாவட்ட அளவில் பரிசீலனை செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 90. மாவட்ட அளவில் நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் 70. தேர்வு செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 20. மாநில ஒருங்கிணைப்புக் குழுவிற்கு அனுப்பப்பட்ட விண்ணப்பங்கள் 20. குழுவால் தேர்வு செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 15. குழுவால் நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் 5. ஒருங்கிணைப்புக் குழுவால் மாவட்டத்திற்குப் பரிந்துரை செய்யப்பட்டு திருப்பியனுப்பப்பட்ட விண்ணப்பங்கள் 15. வாசனைத் திரவியத் தொழிற்சாலை தொடங்குவதற்கான விண்ணப்பம், இந்த 15 விண்ணப்பங்களில் ஒன்று.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: செல்வி பாலபாரதி, திண்டுக்கல்லோடு நில்லுங்கள். சோழவந்தானுக்குத் தனிக் கேள்வி போடுங்கள்.

வினா எண் 173, திரு. பி.எம். நரசிம்மன், மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறை அமைச்சர்.

173—

T.A.P. திட்டம்

***18974—திரு. பி.எம். நரசிம்மன்:**

மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2003 ஏப்ரல் 3]

திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டு வட்டம், வங்கலூர் கிராமத்தில் வனத் துறைமூலம் நிறைவேற்றப்படுகிற T.A.P. திட்டம் இவ்வாண்டு தொடங்கப்படுமா?

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

2002-2003-ல் வங்கலூர் கிராமத்தில் காடு வளர்ப்புத் திட்டத்தின் மூலம், கிராம நலப் பணிகளும், வங்கனூர் காப்புக் காட்டில் 100 எக்டேரில் மரம் வளர்ப்புப் பணிகளும் நிறைவேற்றப்பட்டுள்ளன. வரும் ஆண்டிலும், அதாவது 2003-2004 ஆம் ஆண்டிலும் வங்கனூர் காப்புக் காட்டில் காடு வளர்ப்புத் திட்டத்தின்மூலம் மரம் வளர்ப்புப் பணிகள் நிறைவேற்றப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது என்பதைத் தங்கள் வாயிலாகக் கூற விரும்புகிறேன்.

திரு. பி.எம். நரசிம்மன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனத் துறைமூலம் செயல்படுத்தப்படுகிற T.A.P. திட்டத்தின்மூலம் காப்புக் காட்டில் தடுப்பணைகள், கழிவுநீர்க் குட்டைகள் போன்ற திட்டங்கள் செயல்படுத்தப்படுமா எனவும், மேலும் இந்த வனப் பகுதியைச் சுற்றியுள்ள வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்கிற அடித்தளத்து மக்களுக்கு, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மாவினுடைய பொற்கால ஆட்சியில் மானியத்துடன் கூடிய கடன் வசதி செய்து கொடுக்கப்படுமா' என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கசிவுநீர்க் குட்டை, அந்த மக்களுக்குத் தேவையான குடிநீர் வசதி, ஏழை மக்கள் பயன்பெறுவதற்கு கறவை மாடு வாங்க கடன், பெட்டிக் கடை வைக்கக் கடன், தையல் இயந்திரம், சலவைப் பெட்டி வாங்க கடன் போன்றவை காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் வழங்கப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 174, திரு. பி.கே. சேகர்பாபு, மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்.